## தேசிய விஞ்ஞான மன்றம் - 2015

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் காசுப் பாய்ச்சல் மற்றும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மானியங்கள் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

1974-1998 வரையான காலப்பகுதியில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,004,108 கிரயத்திலான முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த விஞ்ஞான மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் உரிய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததால் நிதிக்கூற்றுக்களிலிருந்து அதன் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,031,986 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,763,678 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 13,795,664 தொகையான குறைவொன்று தென்பட்டது. மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 13,911,072 ஆல் அதிகரித்தமை மேற்குறித்த குறைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது

### 3.2 பங்களிப்பு

2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் மிகையொன்று பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் 2011, 2012 ஆம் ஆண்டுகளின் போது பற்றாக்குறையொன்று பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது மன்றத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 53,822,305 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு வரையில் அது ரூபா 91,510,109 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) விஞ்ஞானம் சார்ந்த ஆராய்ச்சி சாத்தியப்பாட்டினை பலப்படுத்தல், இலங்கையின் இயற்கை வளங்களை அபிவிருத்தி செய்தல், இலங்கை மக்களின் மேம்படுத்துதல் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி பயிற்சியளிக்கும் நோக்கில் பல்கலைக்கழகங்கள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் விஞ்ஞானிகளால் ஆராய்ச்சிகளை ஆரம்பிப்பதை இலகுபடுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல்

(ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விஞ்ஞானிகளுக்கிடையே தகவல்களைப் பரிமாற்றுதலை தைரியப்படுத்துதல்.

(iii) விஞ்ஞானம் சார்ந்த நடவடிக்கைகளுக்காக புலமைப்பரிசில்கள் மற்றும் சிறப்பு புலமைப்பரிசில்கள் வழங்குதல்

(iv) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆளணி தொடர்பான மேம்படுத்தல் பதிவேடொன்று பராமரித்தல்.

(v) மக்களுக்கிடையே விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் செயற்பாட்டிற்காக நிகழ்ச்சிகளுக்கு நிதியத்தை ஈடுபடுத்தி விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தல்

(ஆ) மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பரீட்சித்த போது 2010-2015 காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 189,302,839 பெறுமதியான 150 ஆராய்ச்சி செயற்திட்டங்களாக இருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பூர்த்தி செய்யப்பட்டிருந்த 150 செயற்திட்டங்களில் (வணிக ரீதியாக்குவதற்காக மேம்படுத்துதல்) ரூபா 3,049,000 பெறுமதியான 02 செயற்திட்டங்கள் தொழில்நுட்ப கையளிப்பினை வழங்குவதற்காகவும், ரூபா 1,782,200 தொகை பெறுமதியான 02 செயற்திட்டங்கள் ஆக்கவுரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ii) ரூபா 184,471,639 பெறுமதியான எஞ்சிய 146 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் இறுதி பெறுபேறாக உள்நாட்டு வெளிநாட்டு விஞ்ஞானம் சார்ந்த பிரசுரங்களை வெளியிடுதல், தொடர்பாடலுக்காக பயன்படுத்தல், முதுமாணி, கலாநிதி பட்டப் படிப்புகளுக்காக பயன்படுத்துதல் மற்றும் சனாதிபதி விருதுகளுக்காக பரிந்துரைத்தல் போன்ற நோக்கங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(iii) பூர்த்தி செய்யப்பட்டிருந்த 150 செயற்திட்டங்களில் 59 ஆராய்ச்சிகள் உள்நாட்டு வெளியீட்டு மட்டத்திலும் 27 ஆராய்ச்சிகள் வெளிநாட்டு வெளியீட்டு மட்டத்திலும் 37 ஆராய்ச்சிகள் தொடர்புபடுத்தல் மட்டத்திலும் இருந்ததுடன், 27 ஆராய்ச்சிகளுக்காக எந்தவொரு வெளியீடும் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சிகளுக்குரிய செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் இறுதி செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 32,024,274 கிரயத்திலான 33 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரிய இறுதி அறிக்கை சமர்ப்பித்தலின் போது 01 முதல் 04 ஆண்டுகள் வரையான காலம தாமதம் அவதானிக்கப்பட்டது.

(இ) ஆராய்ச்சி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஆகக் கூடியது 03 ஆண்டுகள் காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், விசேட சந்தர்ப்பங்களின் போது அக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது ரூபா 64,565,489 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 33 ஆராய்ச்சிகளுக்காக 2016 சனவரி வரையில் வழங்கப்பட்டிருந்த மேலதிக காலம் முடிவடைந்து 3 மாதங்களுக்கும் 1 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலமொன்று கடந்திருந்த போதிலும், ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட மானியம் பெற்றுக்கொள்பவர்களின் ஆராய்ச்சி முடிவடையும் போது பணம் சேமிக்கப்பட்டால் 30 நாட்களுக்குள் அதனை மீள்நிரப்பப்பட வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 வரையான காலப்பகுதிக்குரித்தாக வழங்கப்பட்ட மானியத்தைப் பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்ட 28 செயற்திட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,255,529 ஆன மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் 04 கணக்குகளில் 6,112,676 கூட்டுத்தொகையான மீதிகள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.1.1(அ) பிரிவின் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதன் நோக்கம் கொள்வனவை உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 94,282,000 மதிப்பீட்டுப் பெறுமதியான திட்டமிடப்பட்ட கொள்வனவுச் செயற்பாடுகளில் செயற்படுத்தப்படாத கொள்வனவு செயற்பாடுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 78,445,000 ஆக இருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது பாதீட்டின் மூலம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருக்கையில் வெளிநாட்டு பிரயாணச் செலவின வழங்களுக்காக மூலதன செலவின விடயத்திலிருந்து ரூபா 4,343,428 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான வேலைகளுக்காக திருத்திய பாதீட்டின் மூலம் ரூபா 15,000,000 ஆன மேலதிக நிதிஏற்பாடொன்றினை ஒதுக்கிய காரணத்தினால் மூலதனச் செலவினம் தொடர்பான பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுப் பரப்புகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி மானியங்கள் வழங்கலும் மேற்பார்வையும் | (i) | விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்குரிய ஆவணங்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்குரிய கடிதங்களும் செயன்முன்னேற்ற அறிக்கை மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட ஆராய்ச்சிக் கோவைகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. |
| | | (ii) | ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரிய நிதி அறிக்கைகள் தாமதமாக பெற்றுக்கொண்டமை மற்றும் மானியப் பேரேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை. |
| | | (iii) | பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் மீதியான பணத்தை கையளிப்பதில் தாமதம் காணப்பட்டது |
| (ஆ) | பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட உபகரண மானியங்கள் | (i) | உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செய்வதற்காக நீண்டகாலம் எடுக்கப்பட்டமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் தொடர்பாக பௌதீக பரிசோதனையொன்று மேற்கொண்டு உள்ள தன்மையினை உறுதிப்படுத்தப்பட்டிருக்காமை. |
| | | (ii) | வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காமை. |
| | | (iii) | உபகரணங்கள் வழங்கிய நிறுவனத்தின் பொருட் பதிவேட்டின் பிரதியொன்று, பொருள் பெறுவனவு பத்திரத்தின் பிரதியொன்று மற்றும் இரண்டு வருடத்திற்கான பராமரிப்பு உடன்படிக்கையின் பிரதியொன்றை பெற்றுக்கொண்டு உடனடியாக நிலைத்திரு தன்மையை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (இ) | தொழில்நுட்ப கையளிப்பு வழங்கல் | | வருடாந்த செலவின அறிக்கைகளை உரிய காலப்பகுதியில் பெற்றுக் கொண்டு உரிய பேரேடுகளை நாளதுவரையாக்காமை |